மாதவரம் - தரமணி மெட்ரோ ரயில் பணிக்காக

# சுரங்கம் தோண்ட 15 பிரத்யேக இயந்திரங்கள்

● வெளிநாட்டில் இருந்து விரைவில் வருகை

■ சென்னை

சென்னையில் 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் மாதவரம் - தரமணி இடையே சுரங்கம் தோண்டும் நிறுவனத்தை தேர்வு செய்யும் பணி தீவிரமடைந்துள்ளது. சுரங்கம் தோண்ட வெளிநாட்டில் இருந்து 15 பிரத்யேக இயந்திரங்கள் கொண்டுவரப்பட உள்ளன.

சென்னையில் தற்போது விமான நிலையம் - வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை - சென்ட்ரல் ஆகிய 2 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் இயக்கப்பட்டு வருகிறது. அடுத்ததாக, மாதவரம் - சோழிங்கநல்லூர், மெரினா - பூந்தமல்லி, மாதவரம் - கோயம்பேடு என 3 வழித்தடங்களில் மொத்தம் 118.9 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் ரூ.69,180 கோடியில் மேற்கொள்ளப்பட உள்ளன.

▼ மாதவரம் - கெல்லீஸ், கெல்லீஸ் - தரமணி என 21 கி.மீ. தூரத்துக்கு சுரங்கம் தோண்டும் பணியை மேற்கொள்ள டெண்டர் வெளியிடப்பட்டு, நிறுவனம் தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது.

இதில், முதல்கட்டமாக மாதவரம் - தரமணி, மாதவரம் - கோயம்பேடு வரை 52 கி.மீ. தூரத்துக்கு திட்டப் பணிகளை தொடங்க சமீபத்தில் டெண்டர் வெளியிடப்பட்டது. இந்த திட்டப் பணிகளை கண்காணிப்பதற்காக 3 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து கேட்டபோது மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:

சென்னையில் 2-ம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் 52 கி.மீ. தூரத்துக்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்க உள்ளன. அதற்கான ஆரம்பகட்ட பணிகள் தற்போது நடந்து வருகின்றன.

இந்த திட்டப் பணிகளை கண்காணிப்பது மற்றும் பாதுகாப்பு அம்சங்களை ஆய்வு செய்வதற்காக 3 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதேபோல், மாதவரம் - கெல்லீஸ் (9 கி.மீ.), கெல்லீஸ் - தரமணி (12 கி.மீ.) என 21 கி.மீ. தூரத்துக்கு சுரங்கம் தோண்டும் பணியை மேற்கொள்ள டெண்டர் வெளியிடப்பட்டு, நிறுவனம் தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது.

சுரங்கம் தோண்டும் பணியை பாதுகாப்பாக மேற்கொள்ள உலகின் சிறந்த தொழில்நுட்ப வசதி கொண்டுள்ள பிரத்யேக இயந்திரங்களை பயன்படுத்த உள்ளோம். அடுத்த சில மாதங்களில் வெளிநாட்டில் இருந்து 15-க்கும் மேற்பட்ட பிரத்யேக இயந்திரங்கள் கொண்டுவரப்பட உள்ளன. இவற்றின் மூலம் முதல்கட்டமாக மாதவரம் - தரமணி தடத்தில் சுரங்கம் தோண்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.